# திருக்குடும்ப தேவாலயம் காஜாங்

*11, JALAN GEREJA, 43000 KAJANG*
**தொலைபேசி எண்** : *03-8733 1154*
**அகப்பக்கம்** :*www.hfckajang.org.my* **மின்அஞ்சல்** :*hfckajang@gmail.com*

Scan for updates

பங்கு அருள்பணியாளர் : மறைதிரு. மைக்கல் சுவா
துணை அருள்பணியாளர் : மறைதிரு. போனவென்ச்சர் ராயப்பன்
துணை அருள்பணியாளர் : மறைதிரு. பிலிப் சுவா

கல்லூரி/பல்கலைக்கழக குழு :
சகோ. மார்கிரேட் பெரேய்ரா ஆர்.ஜீ.எஸ்
pereiramargaret01@yahoo.com

## பங்கின் திருப்பலி நேரங்கள்

| திகதி | நேரம் | திருப்பலி | குறிப்பு |
|---|---|---|---|
| 27/04/2025 (ஞாயிறு) | காலை 7.00<br>காலை 9.30<br>காலை 11.30<br>பிற்பகல் 1.30 | திருப்பலி தமிழ்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய் | இரக்கத்தின் ஆண்டவர் ஞாயிறு |
| 28/04/2025 ( திங்கள்) | - | திருப்பலி இல்லை | புனித பியர் சானல் - மறைப்பணியாளர், மறைச்சாட்சி |
| 29/04/2025 (செவ்வாய்) | - | திருப்பலி இல்லை | சியன்னா நகர் புனித கேத்தரின் - கன்னியர், மறைவல்லுநர் |
| 30/04/2025 (புதன்) | இரவு 8.00 | திருப்பலி ஆங்கிலம் | புனித ஐந்தாம் பயஸ் - திருத்தந்தை |
| 01/05/2025 (வியாழன்) | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | தொழிலாளரான புனித யோசேப்பு |
| 02/05/2025 (வெள்ளி) | இரவு 7.30<br>இரவு 8.30 | திருமணி ஆராதனை<br>திருப்பலி ஆங்கிலம் | புனித அத்தனாசியு - ஆயர், மறைவல்லுநர் |
| 03/05/2025 (சனி) | காலை 7.00<br>மாலை 5.30<br>மாலை 6.00<br>மாலை 6.00<br><br>மாலை 7.30 | திருப்பலி ஆங்கிலம்<br>இடைவிடா சகாய மாதா நவநாள் நவநாள் செபம்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி - புனித அந்தோணியார் சிற்றாலயம் செர்டாங்.<br>திருப்பலி - யூ.பி.எம் செர்டாங். | புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு - திருத்தூதர்கள்- விழா |
| 04/05/2025 (ஞாயிறு) | காலை 7.00<br>காலை 9.30<br>காலை 11.30<br>பிற்பகல் 1.30 | திருப்பலி தமிழ்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய் | பாஸ்கா 3ஆம் வாரம் - ஞாயிறு |

**உங்கள் காணிக்கைகளுக்கு மனமார்ந்த நன்றி**
*புனித வியாழன் :* **RM 12,320.00** , *பாஸ்கா திருவிழிப்பு :* **RM 11,718.00** , *பாஸ்கா ஞாயிறு :* **RM 18,845.00**

### 1. முதல் வெள்ளிக்கிழமை திருமணி ஆராதனை

ஒரு மணி நேரம் நற்கருணை ஆராதனையை ஒவ்வொரு மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆசீர்வதிக்கப்பட்ட சடங்கின் முன் இறைவேண்டலில் எங்களுடன் ஒன்று சேருங்கள்.
திருமணி ஆராதனை : 02 மே 2025 இரவு 7.30 மணிக்கு
திருப்பலி : இரவு 8.30 மணிக்கு




### 2. படைப்பு நீதி பணிக்குழு

கடவுளின் படைப்பில் அக்கறை கொண்ட அனைவரையும் எங்கள் படைப்பு நீதி பணிகுழுவில் சேர அழைக்கிறோம். சமூக , விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் நிலைத்தன்மையை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அனைவரும் பங்கேற்க வரவேற்கப்படுகிறீர்கள்.

ஆர்வமுள்ளோர்
வார இறுதி திருப்பலிக்குப் பிறகு ஜான் ஸ்டீபன்சன் 012-624 0769 அல்லது செல்வி சலோமி 012-665 5040 என்ற எண்Mஇல் பதிவு செய்ய அணுகவும்.

ஒரு சமூகமாக நமது கிரகத்தைப் பராமரிப்போம்!

### 3. அ.தி.ச திருப்பலி மே 2025

கீழ்க்கண்டப் பகுதிகளில் வசிக்கும் அனைத்து உறுப்பினர்களையும் காஜாங் திருக்குடும்ப திருஅவை வரவழைக்கிறது. இந்தப் பகுதிகளில் வசிக்கின்ற உறுப்பினர்கள் இன்னும் அ.தி.ச வில் பதிந்துக்கொள்ளாதவர்கள் கீழ்க்கண்ட திகதியில் எங்களைச் சந்திக்கவும்.

**BEC 2 ST.JOHN VIANNEY, BALAKONG ZONE**
(Area of coverage: Tmn Taming jaya, Kg Baru Balakong, Taman Seri Timah, Juta Mines Kondominium, Tmn KYK Heights

தேதி/நாள்: 07/5/2025 புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு
இடம்: கேத்தரின் ஒங்கின் குடியிருப்பு /
Residence of Catherine Ong,
No 44, Jalan Taming Kiri 8, Taman Taming Jaya, Balakong.
அ.தி.ச தலைவர்: மைக்கேல் ஒங் 019-2299923

**Semenyih Central Zone Mass**

தேதி/நாள்: 07/5/2025 புதன்கிழமை இரவு 8.00மணிக்கு
இடம்: எட்வர்ட் விக்டரின் குடியிருப்பு /
Residence of Edward Victor
No 2, Jalan Kajang East 1/6, Semenyih.

அ.தி.ச தலைவர்: ஹெலன் கிளாசென் 016-2150827

### 4. ஏப்ரல் மாத விவிலிய வகுப்பு 2025

சாலமோன் அரசர் , விவிலியத்தில் அவரது ஞானத்தால் புகழப்படுகிறார். இறை மக்களை நீதியோடு அரசாட்சி செய்வதற்கு கடவுளிடம் ஞானத்தைக் கேட்டார். தாவீது அரசன், அரசாட்சியை நிலைநாட்ட படைப்பலத்தில் கவனம் செலுத்தினார். சாலமோனோ, நீதிக்கும் அமைதிக்கும் முன்னுரிமை கொடுத்து நாட்டின் வளத்தைப் பெருக்கினார். இஸ்ரயேலிய வரலாற்றில் பொற்கால அரசாட்சியை வழங்கிய சாலமோன் அரசர் பற்றி அறிந்து கொள்ள இம்மாதம் நான்காவது ஞாயிற்றுக்கிழமை இன்று (27.04.2025) மாலை 5.00 மணிக்கு, ஃபாதர் ஹென்றியொட் அறையில் நடைபெறும் விவிலிய வகுப்புக்கு வாருங்கள்.மாலை 4.30 மணி முதல் சிற்றுண்டி வழங்கப்படும்.

### 5.வடக்கு ஸ்பெயின் புனித யாத்திரை

அருள்பணியாளர் மைக்கேல் சுவா 28/04 முதல் 11/05/2025 வரை புனித யாத்திரை செல்லவிருக்கிறார். அவர் இல்லாத நேரத்தில், திருஅவையின் அனைத்து நிர்வாகப் பணிகளையும் அருள்பணியாளர் பிலிப் சுவா மற்றும் அருள்பணியாளர் போனாவெஞ்சர் இராயப்பனும் கவனித்துக்கொள்வார்கள்.



### 6.இளையோர்களுக்கான தியானம்

அமைதி, சிந்தனை மற்றும் புதுப்பித்தலுக்கான வார நடவடிக்கைக்கு எங்களுடன் சேருங்கள்! இந்த தியானம் வாழ்க்கை, நம்பிக்கை மற்றும் தொழிலில் பயணிக்கும் இளையோர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆன்மீக சிந்தனை, சமூகம் மற்றும் இறைவேண்டல் நேரத்திற்கு இந்த தியானம் மிகவும் பயனுள்ளது. .

விவரம்:
திகதி : 10 - 12 மே 2025 / இடம் : Country Cottage @ Kajang
வயது: 25-39 க்குட்பட்ட இளஞர்கள்
கட்டணம் : RM 200 மொழி: ஆங்கிலம் மற்றும் மலாய் மொழியில் நடைப்பெறும்.
பதிவுக்கான இறுதி நாள்: 5 மே 2025
பதிவுத்தளம்: https://asayokl.my/cyanretreat




### 7.தவக்கால பரப்புரை உறைகள்

தவக்கால பரப்புரைக்கான அனைத்து ரொக்கம் அல்லது காசோலை நன்கொடைகளையும் 31/7/2025 க்குள் சமர்ப்பிக்க வேண்டும். தயவுசெய்து இவற்றை உங்கள் பெயர் மற்றும் விவரங்களுடன் ஒரு உறையில் வைத்து தேவாலய நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடவும்.

### 8.30வது ஆண்டு குருத்துவ நிறைவு விழா

ஏப்ரல் 30, 2025 அன்று நம் அருள்பணியாளர் பிலிப் சுவா அவர்களின் 30 வது குருத்துவ நிறைவை முன்னிட்டு அவரை வாழ்த்துவோம். அவரின் திருப்பணியில் கடவுள் அவரைத் தொடர்ந்து வழிநடத்துவராக.

